DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 463/2022** | | | |
| Miscellaneous | .. .. | | | |
| Preliminary Register | .. .. | | | |
| Sessions | .. .. | | | |
| Deposition of Witness for | PW 2 Chief<br>Prosecution | | | |
| Name | : **திரு.கோவிந்தராஜ்** | | : | |
| Father/Husband Name | : திரு. மாரிமுத்து | Calling | : | எலக்ட்ரிக்சன் |
| Village | : புத்தரக்கவுண்டன்பாளையம் | | : | |
| Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் | Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.04.2025.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 03.32

**முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து, எலக்ட்ரிக்சனாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.04.2022 அன்று இரவு 07.00 மணியளவில் எதிரி, என்னிடம் வந்து எனது அம்மாவின் இறப்பு சான்றிதழ் கேட்டார். அதற்கு நான் கரண்ட் வரட்டும் எடுத்து தருகிறேன் என்று கூறினேன். பின்னர் எதிரி, எனது மனைவியை தகாத வார்த்தையால் பேசி, இரும்பு கம்பியால் அடித்தார். 2ம் எதிரி, எனது மனைவி கையை கடித்தார். என்னை, எதிரிகள் அடித்து கீழே தள்ளிவிட்டனர். எனது மனைவியின் தங்கை வந்து எனது அக்காவை எதற்கு அடிக்கீறிர்கள் என்று, எதிரியை பார்த்து கேட்ட போது, அவரையும் கெட்ட வார்த்தையால் திட்டி, அடித்துவிட்டார்கள். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்து சண்டையை விலக்கிவிட்டனர்.

2) பின்பு அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸிக்கு கால் செய்து, சிகிச்சைக்காக பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு வைத்தார்கள். பின்னர் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

**முடிவு நேரம் 03.50**

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/- A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 463/2022** | | | |
| Miscellaneous | .. .. | | | |
| Preliminary Register | .. .. | | | |
| Sessions | .. .. | | | |
| Deposition of Witness for | PW 1 Chief Prosecution | | | |
| Name | : **திருமதி.ஜெயலட்சுமி** | | : | |
| Father/Husband Name | : திரு. கோவிந்தராஜ் | Calling | : | - |
| Village | : புத்தரக்கவுண்டன் பாளையம் | | : | |
| Taluk | : பெத்தநாயக்கன் பாளையம் | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.04.2025.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 03.25

**முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் கோவிந்தராஜ் வீட்டின் வாசலில் உட்கார்திருந்த போது, எதிரிகள் இருவரும் வந்து எனது மாமியாரின் இறப்பு சான்றிதழை கேட்டார்கள். அதற்கு நான் கரண்ட் இல்லை, கரண்ட் வந்தவுடன் எடுத்து தருகிறேன் என்று சொன்னதற்கு, 1 ம் எதிரி என்னை பார்த்து தேவிடியா மகளே என்று கெட்டவார்த்தை திட்டி, கழுத்தை பிடித்து அடித்துவிட்டார். தடுக்க வந்த எனது அம்மாவையும் கெட்ட வார்த்தையால் திட்டினார்.

2) அதன் பின் 1 ம் எதிரி, எனது கழுத்தை பிடித்து நெறித்தார். 2 ம் எதிரி, எனது கையை பிடித்து கடித்தார். எதிரிகள் இருவரும் என்னை மாறி மாறி அடித்தார்கள். 1 ம் எதிரி, எனது தங்கையை அடித்தார். 1 ம் எதிரி இரும்பு பைப்பால், எனது இடது காலில் அடித்தார். அதனால் எனக்கு முட்டில் ஜவ் கிழிந்து விட்டது. பின்னர் பெத்தநாயக்கன்பாளைம் அரசு மருத்துவமனைக்கு எனது கணவர் என்னை அழைத்து சென்றார். அதன் பின் அங்கு உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றேன். பிறகு மேல் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

3) பின்னர் ஜவ்வில் அடிப்பட்டுவிட்டது என்று சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

**முடிவு நேரம்** 03.30

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/- A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.